# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2245/11 - 2021 සැප්තැම්බර් මස 15 වැනි බදාදා - 2021.09.15

*2245/11 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டம்***

*02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 326 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை*

*மேல் மாகாணத்தில் அமைந்துள்ள மாநகர சபைகளினால் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மாநகர சபை நிதியத்தின் நிதிப்பாவனைக்குரிய நடைமுறையைத் தீர்மானிப்பதற்கு (252 ஆம் அதிகாரமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்படாத போதும், அந்தக் கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படும் கட்டளையின் மூலம் அல்லது அந்தக் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 267 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட இடைக்கால ஏற்பாடுகளின் மூலம் அல்லது 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபன (நிறைவேற்றப்பட்ட இடைக்கால ஒழுங்கு விதிகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழான துணை விதிகளின் மூலம் ஏற்பாடுகள் ஏற்பாடு செய்யப்படாத ஏதாவதொரு விடயமொன்று தொடர்பாக அவ்வாறான எழுத்து மூலமான சட்டமொன்றின் மூலம் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்படும் வரை மாநகர சபை நிதியத்தின் நிதி நிர்வாகத்திற்கான தீர்மானங்களை எடுத்தல், செயற்படுத்தல், அல்லது நடைமுறைப்படுத்தாமைக்குரியதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் கீழ் விபரிக்கப்படும் நடவடிக்கை ஒழுங்கு விதிகள் மேல் மாகாணத்தின் எல்லா மாநகர சபைகளினதும் தொடர்புபட்ட நிலைக்கும் உரியதாக வேண்டும் என 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் இலக்க அதிகாரமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 326 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான், எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க இங்கு கட்டளையிடுகின்றேன்.*


1A - G 34951 — 40 (2021/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும் மொத்த பொருளாதாரத்திற்கும் தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு சட்டரீதியான தாபனம் ஒன்றாக ஒவ்வொரு மாநகர சபையும் தமது நிதியினைப் பயன்படுத்தும்போது நீதியாகவும் விவேகத்துடனும் பொது நலன் பாதுகாக்கப்படுமாறு பொறுப்புடன் செயற்பட வேண்டிய படியால் நிர்வாக ரீதியில் அதற்கு ஏதாவது தடை ஒன்று ஏற்படாத வகையில் ஒழுங்கு விதிகளைத் தீர்மானிக்கும் போது ஏற்படும் தேவைகளைக் கருததில் கொண்டு இந்தக் கட்டளை மேற்கொள்ளப்பட்டது என்பதனையும் அறிவிக்கின்றேன்.

ஹொஷான் குணதிலக,
ஆர்டப்பீ அன்ட் கார் வீஎஸ்வி யூஎஸ்பி,
பீஎச்டி(சிறப்பு) எப்ஜஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ பீஎஸ்சீ,
விமானப் படையின் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபைக் கட்டடம்,
மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில்,
பத்தரமுல்லை.
2021, செத்தெம்பர் 15

10-169